# අධ්‍යාපන අමාත්‍යාංශය
# கல்வி அமைச்சு
# Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112784846
isurupaya@moe.gov.lk www.moe.gov.lk


මගේ අංකය / எனது இல. / My Ref. ED/05/69/03/05/76

ඔබේ අංකය / உமது இல. / Your Ref.

දිනය / திகதி / Date 2018.06.07

சுற்றறிக்கை இலக்கம் :- 25/2018

சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,

**<u>தோட்டப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்காக கம்பனிகளின் கீழ் நிர்வகிக்கப்படும் அரச தோட்டங்களின் காணிகளைப் பெற்றுக் கொள்ளல்.</u>**

மேற்கூறப்பட்ட விடயம் தொடர்பில் காணிகளை சுவீகரிக்கும் போது காணிக் கட்டளைச் சட்டம் மற்றும் 1972 இலக்கம் 01 காணி சீர்திருத்தச் சட்டத்தின் மூலமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விதிமுறை மற்றும் காணி சுவிகரிப்பு தொடர்பாக காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சினால் காலத்திற்கு ஏற்றவாறு வெளியிடப்பட்டுள்ள சகல சுற்றறிக்கை ஆலோசனைகள் மற்றும் விதிமுறைகளுக்கு மேலதிகமாக,

தோட்டப் பாடசாலைகளின் மேம்பாடு தொடர்பாக கம்பனிகளின் கீழ் இயங்கும் அரச தோட்டங்களிலிருந்து காணியினைப் பெற்றுக் கொள்ளல் தொடர்பாக கல்வி அமைச்சு, பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு, அரச தொழில் முயற்சி மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட இலக்கம் 2018/ஈடீ/ஈ/05 மற்றும் 2018.04.04 ஆம் திகதிய ஒருங்கிணைந்த அமைச்சரவை விஞ்ஞாபனம் தொடர்பாக 2018.04.25 ஆம் திகதியில் வழங்கப்பட்ட இலக்கம் அ.ப/18/0714/742/010 கொண்ட அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய தோட்டப் பாடசாலைகளுக்கான காணி சுவிகரிப்பின் போது பின்வரும் ஆலோசனைகளைப் பின்பற்ற வேண்டுமென இத்தால் அறிவிக்கிறேன்.

(அ) தோட்டப் பாடசாலைகளில் தற்போது உயர்ந்தபட்சம் 02 ஏக்கர் காணியை அனுபவித்துக் கொண்டிருக்கும் தோட்டப் பாடசாலைகளின் அபிவிருத்திச் செயற்பாடுகள் அவ் 02 ஏக்கர் பரப்பினுள் மேற்கொள்வதற்கு மற்றும் சுவிகரிப்பு மூலமாக அக்காணி உரிமையினை கல்வி அமைச்சிற்குப் பொறுப்பளித்தல்.

(ஆ) தற்போது 02 ஏக்கருக்கு குறைவான காணியை அனுபவிக்கும் தோட்டப் பாடசாலைகளுக்காக அதிகபட்சம் 02 ஏக்கர் எல்லைக்குள் தேவையான காணியை வழங்கும் போது அப்பாடசாலைக்கு அண்மையில் காணப்படும் குறைந்த விவசாயச் செய்கைப் பயன்பாடுகள் கொண்ட காணியை (தேயிலை/ இறப்பர்) தேர்ந்தெடுப்பதற்கு முன்னுரிமை வழங்கி முழுமையான 02 ஏக்கர் காணியை சுவிகரிப்புச் செய்து கல்வி அமைச்சிற்குப் பொறுப்பளித்தல்.

(இ) மேற்கூறப்பட்ட (அ) மற்றும் (ஆ) வில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு காணி சுவிகரிப்பதற்கு முன்னர் பிரதேச பெருந்தோட்டக் கம்பனிப் பணிப்பாளர் சபையின் இணக்கத்துடன் உரிய தோட்டங்களின் பொன் பங்கு (Golden Share) உரிமையாளர்களான திறைசேரி செயலாளரின் அனுமதியை பெற்றுக் கொள்ளல்.

**சுனில் ஹெட்டிஆரச்சி**
செயலாளர்
கல்வி அமைச்சு

**பிரதிகள் -**

01. செயலாளர், நிதி மற்றும் தகவல் ஊடக அமைச்சு
02. செயலாளர், காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு
03. செயலாளர், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு
04. செயலாளர், பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு
05. செயலாளர், அரச தொழில்முயற்சி மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சு
06. செயலாளர், மலையக புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி
07. சகல மாவட்ட செயலாளர்கள்
08. கணக்காய்வாளர், கணக்காய்வாளர் திணைக்களம்


ගරු අමාත්‍යතුමා / கௌரவ அமைச்சர் / Hon Minister +94112784832 +94112784825 education@moe.gov.lk

ලේකම් / செயலாளர் / Secretary +94112784811 +94112785162 secretary.education@moe.gov.lk